செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 197 நாள் : 4.4.17

செய்திக் குறிப்பு

முதன்மை நிலை விளையாட்டு விடுதிகளில் மாணவ / மாணவியர் சேர்க்கை

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப நல்ல பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய 5 முதன்மை நிலை விளையாட்டு விடுதிகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

சிறுவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு விடுதி – சென்னை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

சிறுமியர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு விடுதி – சென்னை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேற்காணும் விளையாட்டு விடுதிகளில் உள்ள பின் வரும் விளையாட்டுகளில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரராக விளங்குவதற்கு 6–ம் வகுப்பு, 7–ம் வகுப்பு மற்றும் 8–ம் வகுப்பு ஆகிய வகுப்புகளில் மாணவ/ மாணவியருக்கான மாநில அளவிலான தேர்வு வரும் 11.05.2017 அன்று காலை 8.00 மணிக்கு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற உள்ளது.

மாணவர்களுக்கான விளையாட்டு :
1. தடகளம், 2. இறகுப்பந்து, 3. மேசைப்பந்து, 4.டேக்வோண்டோ, 5. குத்துச்சண்டை, 6.ஜிம்னாஸ்டிக்ஸ், 7. நீச்சல் மற்றும் 8. டென்னிஸ்

சிறுமியர்களுக்கான விளையாட்டு :

1. தடகளம், 2. இறகுப்பந்து, 3. மேசைப்பந்து, 4.ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் 5. நீச்சல்

விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் உள்ள மாணவ / மாணவியர் 2017–2018 ஆம் ஆண்டு சேர்க்கைக்கு உரிய படிவங்களை அனைத்து மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்களை அணுகி இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். அல்லது www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விளையாட்டு விடுதிகள் தொடர்பான விவரங்களை www.sdat.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் தெரிந்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 11.05.2017 அன்று தேர்வு நடைபெறும் இடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

2017–2018 வருட சேர்க்கைக்கான விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்திடவும் விளையாட்டு விடுதி சார்பான விவரங்களை **WWW.sdat.tn.gov.in** என்ற இணைய தள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு வேலூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை 0416–2221721 என்ற எண்ணிலோ அல்லது 7401703483 என்ற எண்ணிலோ அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

31/3/17 7/2

மாவட்ட ஆட்சித் தலைவர்
வேலூர்.

V1 30-3-17

30/3/2017

04/4/17

செ.ம.தொ.அ.
வேலூர் – 9.